# தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்திமலர்

திருவள்ளுவராண்டு 2035 | ஆகஸ்டு 2004




## இந்திய விடுதலை நாள் விழா

தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் சுதந்திர தின விழாவை முன்னிட்டு 15.08.2004 காலை 8.30 மணியளவில் ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் முனைவர் த.கோ.பரமசிவம் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்கள். இவ்வினிய நிகழ்ச்சியில் பதிவாளர், அலுவலர்கள், பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் பங்கேற்றார்கள்.

– மக்கள் தொடர்புப் பிரிவு

## ஆகஸ்டு '04இல்....

| | |
|---|---|
| 04.08.2004 | – ஆட்சிக்குழுக் கூட்டம் |
| 05.08.2004 | – இந்திய விடுதலைநாள் விழா |
| 31.07.2004 முதல் 08.08.2004 வரை | நெய்வேலி புத்தகக் கண்காட்சி பதிப்புத்துறை பங்கேற்பு |
| 13.08.2004 | – அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை சிறப்புச் சொற்பொழிவு |
| 25.08.2004 | – அகராதியியல்துறை – புத்தொளிப் பயிற்சி – தொடக்கவிழா |
| 26.08.2004 | – இசைத்துறை –அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| 30.08.2004 | – இலக்கியத்துறை – அவ்வை அறக்கட்டளை |
| 31.08.2004 | – நாட்டுப்புறவியல் அறக்கட்டளைச் சொற்பொழிவு |


நடைபெற்ற நிகழ்வுகள்

தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் அரங்க.வாசு பேசியபோது, அமெரிக்காவில் பெர்க்லி, கலிபோர்னியா, ஆஸ்டின் டெக்சாஸ், சிக்காகோ, மிச்சிகன், டியூக், பென்சில்வேனியா பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட 11 பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. அமெரிக்காவில் குடியேறிய வம்சாவழித் தமிழர்கள், அமெரிக்கர்கள் ஆகிய இருவகையினருக்கும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. இருவருக்கும் ஏற்றாற்போலப் பாடத்திட்டம் அமைக்கப்படவேண்டியுள்ளது என்றார்.

தமிழ் வம்சாவழியில் வராத தமிழ் கற்போர், சமயம், வரலாறு, மானிடவியல், இசை, மொழியியல் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர். தமிழ்நாட்டில் எழுதப்படும் பாடப்புத்தகங்கள், அமெரிக்காவில் தமிழ் கற்பிக்கப் பயன்படுவதில்லை. இலக்கியம், பழமொழிகள் அடிப்படையில் பாடங்களை அமைக்காமல் இலக்கண அமைப்பில் பாடங்களை அமைக்கலாம். ஜேம்ஸ் லிண்ட், பரமசிவம் ஆகியோரும் ஜார்ஜ் ஹார்ட், கௌசல்யா ஹார்ட் ஆகியோரும் உருவாக்கிய தமிழ்ப் பாடப்புத்தகங்கள் பயனுள்ளவையாக உள்ளன. தமிழ் கற்பிப்பதற்காக எளிமையான உரையாடல்கள், வாக்கியங்கள், இலக்கணங்களைக் கவனமாகக் கொடுத்து இவை சிறு படங்களாகத் தயாரிக்கப்பட்டன. இதுபோன்று தயாரிக்கப்பட்ட 36 படங்கள், பாடங்களாகத் தயாரிக்கப்பட்டன. இவை இணையதளத்தில் போடப்பட்டன. இப்பாடங்களில் ஒளி. ஒலிக் காட்சிகளுடன் உரையாடல்களும் அளிக்கப்பட்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட தமிழ்ச் சொல்லுக்கான ஆங்கிலச் சொல்லையும் அறிந்து கொள்ளும் வகையில் இந்த இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பேச்சுச் சூழலும் இலக்கணக் குறிப்பை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தில் உரையாடலின் பண்பாட்டுப் பின்னணி குறித்த குறிப்பும், இலக்கணக் குறிப்பும் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடமுடிவில், பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. பேராசிரியர் ஷிஃப்மென்னுடன் சேர்ந்து ஆங்கிலம்–தமிழ்க் கல்வியில் அகராதியைத் தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளேன் என்றார் அரங்க.வாசு. அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறைத் தலைவர் முனைவர் ஆ.கார்த்திகேயன் வரவேற்றார். முனைவர் சா.உதயசூரியன் நன்றி தெரிவித்தார்.

## அமெரிக்காவில் இணையதளம் மூலம் தமிழ் கற்பித்தல்

# தென்னாப்பிரிக்க ரெங்கசாமி பிள்ளை அறக்கட்டளை




## இசைப்போட்டி

தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையின் சார்பில் மொழிப்புல அரங்கில் 26.08.2004 அன்று தென்னாப்பிரிக்க ரெங்கசாமி பிள்ளை அறக்கட்டளை இசைப்போட்டியும், பரிசளிப்பு விழாவும் நடைபெற்றன. அரசர் கல்லூரி, பொன்னையா இராமஜெயம் கல்லூரி, ந.மு.வே.நாட்டார் கல்லூரி, குந்தவை நாச்சியார் மகளிர் கல்லூரி, மன்னர் சரபோஜி அரசினர் கலைக்கல்லூரி மற்றும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இலக்கியத்துறை, அகராதியியல்துறை, நாட்டுப்புறவியல் துறையைச் சேர்ந்த மாணவ மாணவியர்களும் கலந்து கொண்டு பாபநாசம்சிவன், பாரதியார் பாடல்கள், ஊத்துக்காடு வேங்கட சுப்பய்யர் ஆகியோரின் தமிழ்க் கீர்த்தனைகள், நாட்டுப்புறப் பாடல்கள் ஆகியவற்றைப் பாடினர். இசைப்போட்டிக்கு நடுவர்களாக முனைவர் திருமதி.இரா.உமாமகேஸ்வரி, தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையின் முனைவர் பட்ட ஆய்வாளர் செல்வி வி.உத்திராதேவி, ஆய்வியல்நிறைஞர் பட்ட மாணவர் திரு.சி.சூரியகுமார் ஆகியோர் இருந்தனர். இசைப்போட்டியில் செல்வி சு.மாதங்கி-அரசர் கல்லூரி, திருவையாறு - முதல் பரிசினையும், திரு.சு.இரமேஷ்-தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல்துறை மாணவர் - இரண்டாம் பரிசினையும், செல்வி தி.சௌந்தர்யா- பொன்னையா இராமஜெயம் கல்லூரி மாணவி - மூன்றாம் பரிசினையும் பெற்றனர். போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் இசை நூல்கள் பரிசுகளாக வழங்கப்பட்டன. இப்போட்டியின் பரிசளிப்பு விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையேற்று முதல் மூன்று பரிசுகளையும் இசை நூல்களையும் அன்பளிப்பாகப் போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு வழங்கினார். இறுதியில் பரிசு பெற்ற மாணவ மாணவியர் பங்கேற்று மிகச்சிறப்பாகப் பாடித் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தினர்.

-முனைவர் இ.அங்கயற்கண்ணி, இசைத்துறை






## பாரதி சங்கீத வித்யாலயா அறக்கட்டளைச் சொற்பொழிவு

தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையின் சார்பில் பாரதி சங்கீத வித்யாலயா அறக்கட்டளைச் சொற்பொழிவு 26.08.2004 அன்று நடைபெற்றது. விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையேற்றார். துணைவேந்தர் தம்முடைய தலைமைஉரையில் பரதநாட்டியம், குச்சுப்புடி, மணிப்புரி போன்ற பலவகை நடன வகைகள் காலந்தோறும் பெரும் மாற்றத்தோடு வளர்ந்திருப்பினும் அவற்றிற்கு இழையோட்டமாக அடிப்படை மரபு சார்ந்த கூறுகள் இருப்பதைப் பார்க்க முடிகின்றது என்று கூறினார். சிறப்புச் சொற்பொழிவாளராக வந்திருந்த முனைவர் திருமதி ஞானாம்பிகை தேவி குலேந்திரன் அவர்கள் பரதக்கலை மரபும் மாற்றங்களும் என்ற தலைப்பில் செயல்முறை விளக்கத்தோடு உரையாற்றினார். இவர்தம் உரையில் தம்முடைய வெளிநாட்டு அனுபவங்களைக் கூறி, அயல்நாட்டினர் பரதக் கலையை மரபு சார்ந்த கூறுகளுடன் கற்று வருவதைச் சுட்டிக்காட்டி, தற்போது Fusion என்ற பெயரால் மரபுக்கு ஒவ்வாத மாற்றங்கள் புகுத்தப்படுவதையும் சுட்டிக்காட்டினார். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இசைத்துறைத் தலைவர் முனைவர் இ.அங்கயற்கண்ணி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இறுதியாகத் திருமதி.இரா.மாதவி அவர்கள் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

-முனைவர் இ.அங்கயற்கண்ணி, இசைத்துறை.



# தொல்லியல் கூடம்

தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் அரும்பொருள்கள் பத்துக் கூடங்களில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. அவைகளில் முதலாவதாக அமைந்துள்ள கூடம் தொல்லியல் கூடம், தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் தொல்லியல் பொருள்கள் சேகரிக்கப்பட்டு இக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர இந்தியாவின் மற்ற மாநிலங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட பொருள்கள் ஒப்பிட்டு ஆய்விற்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. செப்பு, பித்தளை மற்றும் பலவகை மணிகளால் செய்யப்பட்ட ஆபரணப் பொருள்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. 30,000 ஆண்டுகள் பழமையான கற்கோடாரிகள் (Hand Axes), புதிய கற்கால ஆயுதங்கள்(Neolithic Celts) போன்றவை இக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. திராவிடர்களின் நாகரிகம் என்று பல அறிஞர்களால் போற்றப்படும் சிந்து சமவெளி நாகரிகத்தின் களங்களாகக் கருதப்படும் ஹரப்பா மற்றும் மொஹஞ்சதாரோ ஆகிய பகுதிகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்கள் மற்றும் முத்திரைகளின் மாதிரிகள் (Models) இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்திலிருந்து மேற்பரப்பாய்வில் கண்டெடுக்கப்பட்ட பழமையான உலோக முத்திரையின் மாதிரி (Model) (மேற்புரம் ஹரப்பா முத்திரைகளில் உள்ளது போன்ற சித்திர வரி வடிவ எழுத்துகளையும், கீழ்ப்புறம் தமிழ் பிராமி எழுத்துகளையும் ஒருங்கே கொண்டது). இங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையானதும், சங்க இலக்கியங்களில் ஒன்றுமான பதிற்றுப்பத்தில் கொடுமணம் என்ற பெயரில் குறிப்பிடப்பட்டு, தற்போது கொடுமணல் என்றழைக்கப்படும் ஊரிலிருந்து (ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்தது) அகழ்ந்தெடுக்கப்பட்ட பெருங்கற்காலத்தைச் (Megalithic Period) சார்ந்த பலவகை மணிகள் (Beads), வெண்கலப் பொருள்கள், ஆறடி நீளமுள்ள இரும்பினால் செய்யப்பட்ட வாள்கள், சூதுபவளம் (Carnelian) பதிக்கப்பெற்ற வெண்கலத்தினால் செய்யப்பட்ட புலிப்பொம்மைமற்றும் தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பெற்ற பானை ஓடுகள் ஆகியவை இக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் முதுமக்கள் தாழிகள், சீன மண் தாழிகள் ஆகியவை சேகரிக்கப்பட்டு இக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

# கல்வெட்டியல்


மொழிகளும், எழுத்துகளும் எவ்வாறு தோன்றின என்பது சாதாரண மக்களுக்கு ஒரு புரியாத புதிராகத்தான் உள்ளது. அறிஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு மட்டுமன்றிப் பாமர மக்களுக்கும் புரியும் வகையில் எழுத்துகளின் வளர்ச்சி பற்றிய ஒரு பெரிய அட்டவணை தயாரிக்கப்பட்டு இக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பிராமி எழுத்துகளில் தொடங்கி தற்போதுள்ள தமிழ் எழுத்துகள் வரை தமிழ் எழுத்து ஒவ்வொரு காலகட்டங்களிலும் எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பதை இவ்வட்டவணை விளக்குகிறது. மேலும் அதற்கடுத்ததாகப் பல்வேறு இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. மேலும் ஒரே கல்லில் ஒரு பக்கம் தமிழிலும், மறுபக்கம் மராத்தியிலும் அமைந்துள்ள கல்வெட்டு தஞ்சாவூருக்கருகிலுள்ள ஒரத்தநாடு என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டு இக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் சூலக்கல்வெட்டு, காடவராயன் பெயர் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஆகியவையும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. செப்புப் பட்டயங்களும், ஓலைச்சுவடிகளும் இக்கூடத்தில் உள்ளன.

–கு.தேவராஜ், அருங்காட்சியகப் பொறுப்பாளர்

# 2004-05 புத்தொளிப் பயிற்சி வகுப்புகள்

| துறை | தலைப்பு | புத்தொளிப் பயிற்சி வகுப்பு இயக்குநர் | நடத்தப்பெறும் காலம் |
|---|---|---|---|
| அகராதியியல் | இலக்கணமும், அகராதியியலும் | முனைவர் பெ. மாதையன் | ஆகஸ்டு 2004 |
| அரிய கையெழுத்துச்சுவடி | ஆராய்ச்சி நெறிமுறைகளும் சுவடிகளைப் பதிப்பித்தலில் எழும் சிக்கல்களும் | முனைவர் ம.சா.அறிவுடைநம்பி | செப்டம்பர் 2004 |
| இந்திய மொழிகள் பள்ளி | இந்திய மொழிகளில் இலக்கிய வகைகள் | முனைவர் வே.சா.அருள்ராஜ் | அக்டோபர் 2004 |
| மொழிபெயர்ப்பு | மொழிபெயர்ப்புக் கொள்கைகளும் பயிற்சியும் | முனைவர் எஸ்.இராதாகிருட்டிணன் | நவம்பர் 2004 |
| அயல்நாடுகளில் தமிழ்க்கல்வி | அயல்நாடுகளில் தமிழியல் ஆய்வுகள் | முனைவர் ஆ.கார்த்திகேயன் | டிசம்பர் 2004 |
| அறிவியல் தமிழ் | தமிழில் அறிவியல் பாடமாக்கம் | முனைவர் கு.அண்ணாதுரை | சனவரி 2005 |
| கட்டடக்கலைத்துறை | கோயிற் கட்டடக்கலை | முனைவர் கோ.தெய்வநாயகம் | சனவரி 2005 |
| மொழியியல் | இன்றைய சமூகத்தில் பயன்பாட்டு மொழியியலின் செயற்பரப்பு | முனைவர் எம்.சுசீலா | நவம்பர் 2004 |
| நாட்டுப்புறவியல் | நாட்டுப்புற மக்களின் வாழ்வியலும், பண்பாட்டு மரபுகளும் | முனைவர் க.சாந்தி | மார்ச் 2005 |

# ஔவைத் தமிழ் அறக்கட்டளைச் சொற்பொழிவு




இலக்கியத்துறையின் சார்பில், தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் முனைவர் ஔவை நடராசன் அவர்கள் நிறுவியுள்ள ஔவைத் தமிழ் அறக்கட்டளைச் சொற்பொழிவு 30.08.2004 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இலக்கியத்துறைத் தலைவர் இணைப்பேராசிரியர் முனைவர் தா.ஈசுவரபிள்ளை வரவேற்புரை வழங்கினார். மொழிப்புலத்தலைவரும், தத்துவ மையத்தின் இயக்குநரும் ஆகிய முனைவர் க.பாஸ்கரன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் மு.சிவச்சந்திரன் அவர்கள் எட்டும் எட்டும் என்ற பொருண்மையில் சொற்பொழிவு நிகழ்த்தினார். சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்தையும், பன்னிருதிருமுறைகளில் எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தையும் இணைத்து உரை நிகழ்த்தினார். இறைவனிடம் முழுமையாகத் தம்மைஒப்படைத்துவிட்டால் இறைவன் குருநாதராக வந்து ஆட்கொள்வார் என்ற கருத்து இரு நூல்களிலும் இடம்பெறுமாற்றை விளக்கினார். சிவஞானபோதம் வகுக்கும் இலக்கணத்திற்குத் திருவாசகம் இலக்கியமாகத் திகழுமாற்றைச் சான்றுகளுடன் விளக்கியுரைத்தார். இலக்கியத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் வ.குருநாதன் நன்றி கூறினார். முனைவர் பெ.இராமலிங்கம் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து வழங்கினார்..

- முனைவர் தா.ஈசுவரபிள்ளை, இலக்கியத்துறை

இ.அ.ப. மட்டும்

நூலஞ்சல்

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
# தஞ்சாவூர்

## மைய அரசின் இந்திய மொழிகள் பள்ளி - குழுவினர் வருகை

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மைய அரசின் இந்திய மொழிகள் பள்ளியின் குழுக் கூட்டத்திற்கு சென்று உரையாடியபோது நமது பல்கலைக்கழக கேள்வி-காட்சி மையத்தின் மூலம் ஒலி-ஒளி பதிவு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ள கலை, பண்பாடு, நாட்டுப்புறக்கலைகள், கோவில் சிற்பக்கலை, மொழிப்பயிற்சிக் கல்வி, அகழ்வாராய்ச்சி போன்றவைகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட செய்திப் படங்கள் பற்றிச் சிறப்பாக எடுத்துரைத்தார்கள். அதன் அடிப்படையில் மைய அரசின் இந்திய மொழிகள் பள்ளியின் பாஷா மந்தாகினி-யில் அங்கம் வகிக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஒலி-ஒளிப் பதிவுகளை பார்வையிட மைய அரசின் இந்திய மொழிகள் பள்ளியிலிருந்து மூவர் குழுவினர் 19-8-2004 அன்று கேள்வி-காட்சி மையத்திற்கு வந்தனர். மூன்று தினங்கள் தங்கி, கேள்விக் காட்சி மையத்தில் உள்ள ஒலி ஒளிப்பதிவுகளான கல்வி, கலை, நடனம், கூத்து போன்ற 60க்கும் மேற்பட்ட பதிவுகளைப் பார்வையிட்டனர். கேள்வி-காட்சி மையத்தில் உள்ள ஒலி-ஒளிப் பதிவுகள் ஆராய்ச்சிப் பயன்பாட்டிற்கு மிகவும் பயனுள்ளதாகவும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குத் தயாரிக்கப்பட்டுள்ள திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், பாரதியார் போன்ற செய்திப் படங்கள் கற்றலுக்கும், அறிதலுக்கும் மிகவும் உகந்ததாக அமைந்துள்ளது எனவும் தெரிவித்தனர். இதுபோன்ற செய்திப்படங்களைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்ப ஏதுவாக நவீன தொழில்நுட்பத்துடன் படப்பிடிப்பு மேற்கொள்ளும்போது தமிழ்ப் பல்கலைக்கழகமும் மைய அரசின் இந்திய மொழிகள் பள்ளியும் இணைந்து செயல்படலாம் என்றும் தெரிவித்துச் சென்றுள்ளனர். மேலும், அவர்கள் ஆராய்ச்சி மற்றும் ஒலி-ஒளிப்பதிவுக்கு தேவைப்படும் பன்னிரண்டு செய்திப்படங்களின் ஒலி-ஒளிப் பதிவின் நகல்களைக் குறுந்தகட்டில் பதிவுசெய்து பெற்றுச் சென்றுள்ளனர்.

- கேள்வி-காட்சி மையம்

## பாராட்டுதல்கள்

◆ தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறைத் தலைவர் முனைவர் கா.இராசன் அவர்களும், தத்துவத்துறை இணைப்பேராசிரியர் ஜெ.அரங்கசாமி அவர்களும் காமன்வெல்த் நாடுகளில் ஆய்வு செய்வதற்குத் தேர்வு செய்யப் பெற்றுள்ளனர். இவர்கள் இருவரும் முறையே இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும், இலங்காஸ்டர் பல்கலைக்கழகத்திலும் ஆய்வு செய்ய உள்ளனர். இருவருக்கும் பல்கலைக்கழகத்தின் சார்பில் பாராட்டுதல்கள்.

◆ தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ்த்துறையைச் சார்ந்த முனைவர் சா.கிருட்டிணமூர்த்தி (இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை) அவர்கட்குப் புதுதில்லியில் "இராஜீவ்காந்தி இராஷ்டிரியாஏக்தா" விருது வழங்கப்பட்டது. இனிய பாராட்டுதல்கள்.

## நெய்வேலியில் புத்தகக் கண்காட்சி

ஆண்டுதோறும் நெய்வேலியில் நடத்தப்பெறும் புத்தகக் கண்காட்சி, இவ்வாண்டும் 2004 சூலை 31 முதல் ஆகஸ்ட் 8ந் தேதி முடிய நடைபெற்றது. இக்கண்காட்சியில் பதிப்புத்துறை இயக்குநர் (பொ) முனைவர் ஆ.இராமநாதன் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு விற்பனையாளர்களை ஊக்குவித்தார். இக்கண்காட்சியில் ரூ.56,128/- மதிப்புள்ள நூல்கள் விற்பனை செய்யப்பட்டன.

- இயக்குநர்(பொ), பதிப்புத்துறை

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"

- முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்

### ஆகஸ்டு '04 இல்....

### முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

| ஆய்வாளர் பெயர் / துறை | தலைப்பு | வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|
| 1. வி.சு.மாலதி, நாட்டுப்புறவியல் துறை | பட்டுக்கோட்டை வட்டார பழமொழிகள் | 23.08.2004 |
| 2. வெ.சத்யநாராயணன், இலக்கியத்துறை | தமிழிலக்கணங்களில் புணரியல் | 25.08.2004 |
| 3. மா.அய்யாராஜு, இலக்கியத்துறை | அந்தமான் தமிழர்தம் வாழ்வியலும் இலக்கியமும் | 27.08.2004 |
| 4. நா.பழனி, நாட்டுப்புறவியல்துறை | தமிழ்ப் பண்பாட்டில் எண்களின் தாக்கம் | 30.08.2004 |

- தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு